[1979 மார்ச் 30]

நகரப் பஞ்சாயத்துக்களில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதற்கான உரிமங்கள்.

*வினா எண். 571—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பஞ்சாயத்துக்களில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதற்காக உரிமங்கள் கேட்டு மனுக்கள் அரசாங்கத்திற்கு வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) நகரப் பஞ்சாயத்துக்களில் ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதற்கு உரிமங்கள் வழங்குமாறு வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. ரா. மார்க்கபந்து : வட ஆற்காடு மாவட்டத்தில் எந்தெந்த நகரப் பஞ்சாயத்துக்களில் இருந்து இதுபோன்ற மனுக்கள் வந்திருக்கின்றன ? இதுவரை அந்த மனுக்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? ஏதேனும் முடிவுகள் எடுக்கப்பட்டனவா ? எப்போது உரிமம் தருவார்கள் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. செண்பகம் ஸ்கூட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து மனு வந்திருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கேட்பது பற்றிய குறிப்புகள் கைவசம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : நகரப் பஞ்சாயத்துக்களில் ஆட்டோ ரிக்ஷா ஓட்ட முன்வருகிறவர்களுக்கு அரசு, கடன் உதவி வழங்க முன்வருமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கடன்களைப் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆட்டோ ரிக்ஷா உரிமங்கள் வழங்கும்போது முதலாவது அரிசனங்களுக்கும், இரண்டாவது பிற்பட்டவர்களுக்கும் வழங்கப்படும் என்ற நிலையை அரசாங்கம் உருவாக்குமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இப்போது அரிசனங்களுக்குத் தனிச் சங்கங்கள் செயல்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலைப்பகுதிக்கு பஸ் வசதி.

*வினா எண். 572—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப்பகுதிக்கு பஸ் வசதி கோரி அரசுக்கு ஜவ்வாது மலைவாசிகள் முன்னேற்றச் சங்கம் கோரிக்கை ஏதேனும் அனுப்பிவைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) ஆம்.

(ஆ) மக்களின் கோரிக்கைகளுக்கிணங்க ஆலங்காயத்திலிருந்து நெல்லி வாசல் நாடுக்கு, ஆண்டியப்பனூர், புதூர் நாடு வழியாக ஒரு மினி பஸ் விட ஏற்பாடு செய்யப்பட்டு தற்காலிக அனுமதி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இத்தடத்தில் மினி பஸ் ஒன்று விடப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அரசினுடைய அனுமதிக்காக இது எப்போது அனுப்பப்பட்டது? அரசு எப்போது அனுமதி வழங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இந்த மினி பஸ் விடுவதற்கு ஏற்கெனவே வி. கே. குப்புசாமி என்பவருக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்தக் கால கட்டத்திலே அவர் மினி பஸ் விடாத காரணத்தால் சையத் அன்வர் என்பவருக்கு 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாளன்று அனுமதி வழங்கப்பட்டது. சையத் அன்வார் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாளுக்குள் அவருக்குக் கொடுக்கப்பட்ட காலத்திற்குள் மினி பஸ் விடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அதற்குள் அவர்கள் விட்டுவிடுவார்கள் என்று போக்குவரத்துத் துறையினர் தெரிவித்திருக்கிறார்கள்.